கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஒரு தனிப்பட்ட இடத்திற்கு மட்டும் அல்ல. இவ்வாறு பெயர் மாற்றவேண்டுமென்று 17 தெருக்கள் குறிப்பிடப்பட்டு, பதினேழு பெயர்களை அனுப்பியிருந்தார்கள். இது கார்ப்பரேஷன் கவுன்சில் செய்து அனுப்பிய தீர்மானம். அவற்றில் சில மாறுதல்களைச் செய்யலாமா, இதுபற்றி மீட்டும் பரிசீலனை செய்து அனுப்புங்கள் என்று அரசாங்கம் அதை அவர்களுக்கே அனுப்பியிருக்கிறது. இப்போது முடிவாக அவர்கள் பதில் வரும் வரையில் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பாங்குளிடிங் ஹாலை ராஜாஜி ஹால் என்றும் ஆரன்மூர் அரண்மனையைத் தமிழகம் என்றும் இந்த அரசாங்கம் மாற்றி இருக்கையில் கார்ப்பரேஷன் இந்நகரில் உள்ள பெயர்களை மாற்றவேண்டும் என்று யோசனை தெரிவித்தபோது, அதில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாவின் பெயர் இருந்த காரணத்தினாலேயே அதைத் திரும்பவும் யோசனை செய்யுங்கள் என்று அரசாங்கம் திருப்பி அனுப்பிவிட்டார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தப் பதினேழு பெயர்களில் அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரே இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : மைலாப்பூரில் உள்ள எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டுக்கு நமது குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரை வைக்க வேண்டும் என்றும், நகரசபைக்கு லட்சம் ரூபாய் வழங்கிய சிவாஜி கணேசன் பெயரை பெசன்ட் ரோடுக்குச் சூட்டவேண்டும் என்றும் இது போல நல்லது செய்கின்றவர்களுடைய பெயரை நம் நகர வீதிகளுக்குச் சூட்டவேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டது. இப்படி நல்லவர்களுடைய பெயரை நிரந்தரமாக விளங்கும்படி சூட்டுவது நல்லது அல்லவா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கூறிய பெயர்கள் இந்த 17 பெயர்களில் வரவில்லை. இது விஷயம் கார்ப்பரேஷனிடம் இருந்து தகவல் வந்தவுடன் முடிவு செய்யப்படும்.

கனம் சபாநாயகர் : நம் நகரத்தில் எத்தனை ரோடுகள் இருக்கின்றனவோ அத்தனை நல்லவர்கள்தான் இருக்கிறார்களா ?

பாடப் புத்தகங்கள்

* **452 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிக்கூட பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு சீக்கிரமாக கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A list of approved books is published every year in the *Fort St. George Gazette*. At the time of publication of the list, the concerned publishers are requested to supply in time sufficient number of copies of the books and also to have on stock a sufficient number of copies.

22nd November 1963]

With a view to make nationalised text-books available to the students easily and in time, the agents are required according to a clause in the agreement entered into with them, to open sub-depots in each taluk by themselves or through sub-agents under their control. Similarly the agent, Madras city has to open ten sub-depots in the City. The books are also being printed according to a time schedule so that sufficient number may be available when the schools re-open after the summer vacation.

திரு. கரு. சீமைச்சாமி : பல ஏற்பாடுகள் செய்திருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூடம் திறந்து இரண்டு மாதத்திற்குள்கூடக் கிடைப்பது இல்லை. ஆகவே ஏப்ரல் மாதமே பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகம் செய்ய உத்தரவிட முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு சொன்னதுபோல இந்த விஷயம் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக்கூடத் துவக்க ஆண்டு

* 453 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடத் துவக்க ஆண்டினை ஜனவரியில் துவக்குவதற்கு யோசனை ஏதாகிலும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இது சம்பந்தமாகக் கல்வி நிபுணர்கள் அரசாங்கத்திற்குக் கருத்துக்கள் கூறியிருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) No. In respect of colleges, a suggestion was received and communicated to the two universities for necessary action.

S.S.L.C. Examinations

* 454 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have got any proposal to reform the examination system to reduce the failures in the Secondary School Leaving Examinations; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சென்ட்ரல் அட்வைசரி போர்டில் இருந்து இந்தத் தேர்வு முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதா? அந்த யோசனையின் மீது அரசாங்கத்தின் கருத்து என்ன?